கடந்த மாத பதிவுகள்

# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

தேனீ 10 ஆண்டுகள் 22.02.2001 - 22.02.2011

Online Newspaper in Tamil Vol.10 10.06.2012

முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
வளர்பிறை
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN
BBC
Newsnow

## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (52)

### 52. இராணுவத்தினரைத் தாக்கிய தருமபுர இளைஞர்கள்!




பொதுவாகவே மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் படை முகாம்கள் அமைவதை உலக நாடுகள் பலவற்றிலும் வாழும் மக்கள் விரும்புவதில்லை. மார்க்சிய மூலவர்களான மார்க்ஸ், லெனின் போன்றோர் தெளிவாகக் குறிப்பிட்டது போல, ஆயுதப்படைகள் என்பவை அரசு இயந்திரத்தின் அச்சாணியாகும். அது முதலாளித்துவ அரசாக இருக்கலாம் அல்லது சோசலிச அரசாக இருக்கலாம். அடிப்படை உண்மை அதுதான். இலங்கை போன்ற முதலாளித்துவ அமைப்பு முறையைக் கொண்ட நாட்டில், ஆயுதப்படைகள் என்பவை அந்த அமைப்பைப் பாதுகாக்கவே செயற்பட்டு வந்துள்ளன. அதிலும் குறிப்பாக பெரு முதலாளிகளின் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருந்த நேரங்களில், அந்தக் கட்சியின் அரசாங்கங்கள் ஆயுதப்படைகளை பொதுமக்களுக்கு எதிராக தாராளமாகப் பயன்படுத்தி வந்துள்ளன.

1970ல் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி கூட்டரசாங்கம் புதிதாக விசுவமடுவில் அமைத்த இராணுவ முகாமும் சந்தேகத்துக்குரிய ஒன்றாகவே இருந்தது. இன்று வடக்கு கிழக்கிலிருந்து ஆயுதப்படைகளை முற்றாக அகற்ற வேண்டும் எனப் பிரச்சாரம் செய்துவரும் பிற்போக்கு இனவாதத் தமிழ் தலைமையின் (தமிழ் தேசியக் கூட்டமைப்பு) முன்னேடிக் கட்சிகளான அன்றைய தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகள், அன்றைய அரசாங்கம் விசுவமடுவில் புதிதாக இராணுவ முகாமை அமைத்தபோது எவ்வித ஆட்சேபனையையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் கட்சிகளின் இந்த நிலைப்பாடு ஆச்சரியத்துக்குரிய ஒன்றல்ல. ஏகாதிபத்திய விரோத சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வரும் வேளைகளில் அரசுக்கு எதிராகப் பலவிதமான போராட்டங்களை நடாத்துவதும், ஏகாதிபத்தியத்துக்கு விசுவாசமான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிபீடம் ஏறும் சமயங்களில் தமிழ் தலைமைகள் அவ்வரசுடன் கூடிக்குலாவுவது அல்லது மௌனம் காப்பதும் கடந்த 60 ஆண்டுகளாக அவைகள் மிக ஒழுங்காகப் பின்பற்றி வரும் நடைமுறையாகும்.

விசுவமடுவில் அரசாங்கம் புதிதாக இராணுவ முகாம் அமைத்தது குறித்து தமிழ் கட்சிகள் அசட்டையாக இருந்தாலும், அந்தப் பகுதி மக்கள் மத்தியில் பெரும் அச்சமும் பதட்டமும் உருவாகி இருந்தது. அவர்கள் அஞ்சியபடியே நிலைமைகளும் உருவாகத் தொடங்கின.

இராணுவத்தினர் முகாமிட்ட பகுதியில் போதிய தண்ணீர் வசதி இருக்கவில்லை. குடிநீரை அவர்கள் அங்குள்ள கிணறுகளிலிருந்து ஒருவாறு பெற்றுக்கொண்டாலும், குளிப்பதற்கும் இதர தேவைகளுக்கும் போதிய தண்ணீர் அங்கு இருக்கவில்லை. எனவே அவர்கள் உழவு இயந்திரம் ஒன்றில் பொருத்தப்பட்ட தண்ணீர் தாங்கி (பவுசர்) மூலம் தண்ணீர் எடுத்துவர ஆரம்பித்தனர். அவர்களுக்குத் தேவையான போதிய தண்ணீர் அருகிலுள்ள விசுவமடு அல்லது உடையார்கட்டுக் குளத்தில் இருந்தபோதும், அவர்கள் தருமபுரம் - விசுமடு எல்லையிலுள்ள நெத்தலி ஆற்றில் தண்ணீர் எடுக்க ஆரம்பித்தனர். உண்மையில் நெத்தலி ஆற்றில் எப்போதுமே போதிய தண்ணீர் இருப்பதில்லை என்றபோதிலும், அவர்கள் அங்குதான் இலக்கு வைத்து வந்தனர்.

இராணுவத்தினர் இவ்வாறு நெத்தலி ஆற்றில் தண்ணீர் எடுக்கத் தீர்மானித்ததிற்கு ஒரு காரணம் இருந்தது. முழுக்க முழுக்க கூலி விவசாயிகள் நிறைந்த தருமபுரம் குடியேற்றக் கிராமத்தில் ஒவ்வொருவரிடமும் தனித்தனியாகக் கிணறுகள் கிடையாது. குடிப்பதற்கான தண்ணீரை அவர்கள் அயலில் உள்ள வீடுகளிலிருந்து பெற்றுக் கொண்டாலும், குளிப்பதற்கு அவர்கள் பெரும்பாலும் நெத்தலி ஆற்றையே பயன்படுத்தி வந்தனர். அவர்களில் பெரும்பாலோர் – குறிப்பாக வயோதிப மற்றும் இளம் பெண்கள் தமது வேலை முடிவடைந்ததும், நெத்தலி ஆற்றுக்கு வந்து குளித்துவிட்டு, தமது அன்றைய கூலிப்பணத்தில் அன்று சமைப்பதற்குத் தேவையான பொருட்களைக் கடைகளில் வாங்கிச் செல்வது வழக்கம்.

எனவே மாலை வேளைகளில் நெத்தலி ஆற்றங்கரை ஒரு தீர்த்தக்கரை போலவே காட்சியளிக்கும். அந்த நேரத்தில்தான் இளம் இராணுவ வீரர்களும் அந்த ஆற்றில் தண்ணீர் எடுப்பதற்கு வருவதை வழமையாக்கிக் கொண்டனர். இராணுவத்தினர் தங்கள் பாட்டில் தண்ணீரை எடுத்துக்கொண்டு சென்றால் பரவாயில்லை. ஆனால் இராணுவத்தினரது வயதுக்கோளாறும், அதிகார மிடுக்கும் தேவையில்லாத வேலைகளில் ஈடுபடத் தூண்டியது.



தண்ணீர் எடுக்க வரும் இராணுவ வீரர்கள் அங்கு திறந்த வெளியில் பல சங்கடங்களுக்கு மத்தியில் குளித்துக் கொண்டிருக்கும் இளம் பெண்களைக் கேலி செய்வதும், அந்த பெண்கள் மீது தண்ணீர் எத்தி விளையாடுவதுமாக நிலைமைகள் மோசமாகிக் கொண்டிருந்தன. இராணுவ வீரர்களின் இந்த அத்துமீறிய செயல்கள் தருமபுரம் இளைஞர்கள் மத்தியில் பெரும் கோபக்கனலைக் கிளறிவிட்டது. ஏனெனில் அங்கு குளிக்கும் இளம் பெண்கள் அந்த இளைஞர்களின் சகோதரிகளாகவோ உறவினர்களாகவோ இருந்தனர். இளைஞர்கள் சில நாட்கள் பொறுமை காத்தும் இராணுவத்தினரின் செயற்பாடுகள் நின்றபாடாக இல்லை.

இந்த நிலைமையில் ஒருநாள் மாலை வழமைபோல இராணுவத்தினர் தண்ணீர் எடுத்துக்கொண்டு, அதேவேளையில் தமது வழமையான 'திருவிளையாடல்களை' பெண்களுடன் மேற்கொண்டிருந்தனர். சராசரி யாழ்ப்பாண தமிழ் இளைஞர்களைப் போலல்லாது, வாழ்க்கையில் பல பெரும் கஸ்டங்களைக் கடந்து வந்த அந்தக் கூலி விவசாய இளைஞர்கள், அநீதியைக் கண்டால் தயங்காதும் பயப்படாமலும் நியாயம் கேட்கக்கூடியவர்கள். எனவே அவர்கள் பெரும் தொகையில் சுயமாகவே அணிதிரண்டதுடன், தன்னிச்சையாகவும் செயல்படத் தொடங்கினர்.

தாம் செய்யப்போகும் செயல் என்னவிதமான பின்விளைவுகளை ஏற்படுத்தப் போகிறது என்பதைப் பற்றி அறியாத அல்லது கவலைப்படாத அந்த இளைஞர்கள், ஊர்வலமாக நெத்தலி ஆற்றங்கரைக்குச் சென்று, அங்கு தண்ணீர் எடுத்துக்கொண்டிருந்த இராணுவ வீரர்களை இரும்புக் கம்பிகளால் தாக்கி காயப்படுத்தினர். தாக்குதலுக்குள்ளான இராணுவத்தினர் ஒருவாறு சமாளித்துக்கொண்டு தப்பி ஓடிவிட்டனர். அதேவேளையில் பொதுமக்களும் தமது பிள்ளைகள் செய்த விபரீத செயலால் அச்சமடைந்து, அங்கிருந்து விரைவாகத் தமது வீடுகளுக்குச் சென்றுவிட்டனர்.

இலங்கையில் மட்டுமின்றி, உலகின் எந்த நாட்டிலாவது படையினர் மீது யாராவது தாக்குதல் நடாத்தினால், தாக்குதல் நடாத்தியவர்கள் நிராயுதபாணியான பொதுமக்களாக இருந்தாலும்கூட, என்ன நடக்குமோ, அந்த நிலைமை அங்கும் உடனடியாக ஏற்பட்டது. தமது சக வீரர்கள் தாக்கப்பட்டதை அறிந்து பெரும் ஆத்திரத்துக்குள்ளான இராணுவத்தினர் விரைந்து நடவடிக்கையில் இறங்கினர்.

பொதுவாக அன்றைய காலகட்டத்தில் விசுவமடு விவசாயிகள் மத்தியிலும், அவர்களது தோட்டங்களில் வேலை செய்த தருமபுரம் கூலி விவசாயிகள் மத்தியிலும் ஏககாலத்தில் பெரும் செல்வாக்குக் கொண்டிருந்த புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியினர் தான் தம்மீதான தாக்குதலுக்குக் காரணம் என இராணுவத்தினர் தவறாக எடைபோட்டதுடன், அவர்களைத் தேடி இராணுவத்தினர் தமது வேட்டையை ஆரம்பித்தனர். இராணுவத்தினரின் தவறான அனுமானத்துக்கு அங்கு அக்கட்சிக்கு எதிரான சிலர்தான் காரணம் என்ற விடயம் பிற்காலத்தில் தெரிய வந்தபோதிலும், இராணுவத்தினரின் தாக்குதல் அந்தக் கட்டத்தில் மிக மோசமாகவே இருந்தது. இராணுவத்தினர் தருமபுரத்தில் தாக்குதல் நடாத்தியதைக் காட்டிலும், விசுவமடுவில் இருந்த அந்தக் கட்சி உறுப்பினர்களையே மோசமாகத் தாக்கினர்.

இராணுவத்தினரிடம் அகப்பட்ட சிலர் மிகவும் மோசமாக இராணுவத்தினரால் தாக்கப்பட்டனர். பலர் தப்பிவிட்டனர் என்றபோதிலும், அவர்களது உடமைகள் சேதமாக்கப்பட்டன. வடமராட்சி கல்லுவம் கிராமத்தைச் சேர்ந்த மகேந்திரம் என்ற தோழரின் வீட்டில் புகுந்த இராணுவத்தினர், அங்கு அவர் இல்லாமல் போகவே, அவருடைய உற்பத்தியான மிளகாய் செத்தல் மூடைகளுடன் சேர்த்து அவரது வீட்டைத் தீயிட்டுக் கொளுத்தினர். பலரின் வீடுகளையும் மிளகாய் செடிகளையும் சேதப்படுத்தினர். கரவெட்டியைச் சேர்ந்த ஆறுமுகம் என்ற மூத்த தோழர் ஒருவரைத் தேடிச்சென்ற இராணுவத்தினர், அவர் அகப்படாமல் போகவே, அவருடன் தங்கியிருந்து தோட்ட வேலைகளில் ஈடுபட்டு வந்த மலையகச் சிறுவனைப் பிடித்துச் சென்று அவனது மல வாசலில் தடிக்குச்சியை செலுத்திச் சித்திரவதை



Yarl TV Live

புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்
சிங்களவர்கள் ஆகிய நாங்கள்
யாழ்ப்பாணத்தின் அவலம்!
பரீசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்: புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம் (பகுதி-1)
பரீசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்: புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம் (பகுதி-2)
ராஜீவ் கொலையாளிகளின் குற்றப் பின்னணி!
தமிழ் மக்கள் இழந்து வரும் சந்தர்ப்பங்கள்
றொபேட் பிளேக், தயவுசெய்து ஸ்ரீலங்கா மக்களுக்குப் பதில் சொல்லுங்கள் (1)
றொபேட் பிளேக், தயவுசெய்து ஸ்ரீலங்கா மக்களுக்குப் பதில் சொல்லுங்கள் (2)

செய்தனர். இருந்தும் அவர்களது வெறி அடங்கவில்லை.

விசுவமடுவில் விவசாயம் செய்து வந்த பலர் அச்சம் காரணமாக அங்கிருந்து வெளியேறி, யாழ்ப்பாணத்திலுள்ள தமது கிராமங்களுக்கச் சென்று தங்கினர். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் வெளியேறவில்லை. அவர்கள் முதலில் தமக்குப் பலமான 'நாச்சிக்குடா' என்றழைக்கப்படும் விசுவமடு 10ம் கட்டைப்பகுதிக்குப் பின்வாங்கி அங்கு தங்கியிருந்தனர். ஒரு பகுதியினர் நெத்தலி ஆற்றின் தென் பகுதியிலிருந்த காடுகளுக்குச் சென்று தங்கினர். அவர்களுக்கு தருமபுரத்தைச் சேர்ந்த பெண்கள் தம்மால் முடிந்தளவு உணவுகளை சமைத்து வந்து வழங்கினர். சில நாட்களாக தருமபுரம் மக்கள் விசுவமடுவுக்கு கூலி வேலைக்குச் செல்வதையும் நிறுத்தினர்.

ஆனால் இராணுவத்தினரும் தமது தேடுதல் வேட்டையைத் தளர்த்தவில்லை. தம்மால் தேடப்படுபவர்கள் காடுகளுக்குள் ஒளிந்திருக்கலாம் என்று கருதிய அவர்கள், வட பகுதியின் வரலாற்றில் முதற்தடவையாக கவச மோட்டார்களையும், ஹெலிகொப்டர்களையும் கொண்டு வந்து காடுகளிலும் தேடுதலை ஆரம்பித்தனர். நிலைமை நாளுக்குநாள் மோசமாவதைக் கண்ட தோழர்கள் விசுவமடுவைவிட்டு தற்காலிகமாக வெளியேறத் தீர்மானித்தனர்.

அந்த தோழர்கள் ஒருநாள் இரவு வேளையில் விசுவமடுவிலிருந்து வெளியேறி கால் நடையாக கல்மடுக் குளக்கட்டின் ஊடாக இராமநாதபுரம் சென்றடைந்தனர். அங்கு இன்னொரு தோழரின் வீட்டில் இரவு உணவை முடித்த பின்னர், தொடர்ந்து நடந்து வட்டக்கச்சி, கோவிந்தன் கடைச்சந்தி என்பனவற்றின் ஊடாக கிளிநொச்சி நகரை அடைந்தனர். அடுத்த நாள் கிளிநொச்சி பட்டினசபைத் தேர்தல் நடைபெற இருந்ததால், கிளிநொச்சியில் பொலிஸ் கெடுபிடி அதிகமாக இருந்தது. இருப்பினும் சாதுரியமாக கண்டி வீதியைக் கடந்து கிளிநொச்சியின் மேற்குப்புறமாக முன்னேறி கனகபுரம் (கோழிப்பண்ணை), முறிப்பு என்பனவற்றின் ஊடாக அக்கிராயன் கோணாவில் பகுதியில் மத்தியதர விவசாயிகள் குடியேற்றத்தில் 70ம் இலக்கத்தில் அமைந்திருந்த புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் பயிற்சி முகாமைச் சென்றடைந்தனர்.

இந்த இடத்தில், இந்தப் பயிற்சி முகாம் பற்றிச் சிறிது சொல்லிவிட்டு மேலே போவது பயனுள்ளதாக இருக்கும்.

தொடரும்

முன்னைய பதிவுகள்